DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 77 /2020**

**Deposition of LW2 examined as PW2** Dt. 27.05.2025

| | |
|---|---|
| Name | அன்பழகன் |
| Father's/Husband's Name | தில்லை |
| Village | செம்பதனிருப்பு |
| Taluk | |
| Age | 80/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 27.05.2025

(A1 to A3 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வந்தேன். தற்போது எதிரிகள் தாக்கியதால் பழைய மாதிரி வேலைக்கு செல்ல முடியவில்லை. கடந்த 01.07.2020 ம் தேதி காலை 10.00 மணியளவில் ஆடுகளை மேய்ப்பதற்காக வயலில் விட்டுவிட்டு எங்கள் ஊரான செம்பதனிருப்பு தூங்குமூச்சி மரம் அருகே எனது மூத்த மகன் ராஜாவை எதிரிகள் கையில் அடித்தார்கள். அதனை நான் தடுக்க சென்றபோது இளையராஜா கையில் கட்டையும், தினேஷ் கையில் கம்பியும் இளையராஜா மகன் பெயர் தெரியவில்லை. நீதிமன்றத்தில் நடுவில் நிற்கும் 2வது எதிரி கையில் கட்டை வைத்து கொண்டு எதிரிகள் மூவரும் தூங்குமூச்சி மரம் அருகே வந்த என்னை வழிமறித்து இளையராஜா என்னை கட்டிபிடிக்க தினேஷ் கம்பியால் என்னை தலையில் அடித்ததில் ரத்தம் வந்தது. அவரது மகன் கட்டையால் எனது முதுகில் அடித்தார். நான் கீழே விழுந்ததும் இளையாராஜா கட்டையால் என் முதுகில் அடித்தார். அப்போது என் மனைவி அங்கு வந்த போது என் மனைவி மல்லிகா என் மேல் வந்து விழுந்து எனக்கு விழ இருந்த அடியை தடுத்தார். அப்போது என் மனைவிக்கு பின் பகுதியில் பலத்த அடிபட்டது. என் மனைவி தற்போது உயிருடன் இல்லை. சஞ்சீவ்காந்தி என்பவருடைய காரில் நாங்கள் மூவரும் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். மருத்துவமனையில் உள்நோயாளியாக 10 நாட்கள் சிகிச்சை எடுத்து கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு இரண்டு மகன்கள் ஒரு மகள் என்றால் சரிதான். எனக்கும் எதிரி இளையராஜாவிற்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் முன்பு இருந்தது சொத்து பிரித்து கொடுத்ததற்கு பின்பு இல்லை. எனது மகன் இளையராஜா உள்ளூரில் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். அவர் உள்ளூரில் திருமணம் செய்து கொண்டதால் கருத்து வேறுபாடு ஏற்பட்டு நான் அவரிடம் பேசாமல் இருந்து வந்தேன் என்றால் சரிதான். அதனால் நான் அவருக்கு சொத்து தரமாட்டேன் என்று கூறியதால் ஊரில்

27/5/25

LTI Mark of Anbazhagan

பலமுறை பஞ்சாயத்து நடைபெற்றது என்றால் சரிதான். இது தொடர்பாக பலமுறை பாகசாலை காவல் நிலையத்திலும் பஞ்சாயத்து நடைபெற்றது என்றால் சரிதான். இளையராஜாவின் வீட்டை ராஜா கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அது தொடர்பாக பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான். அதற்கு நஷ்டஈடாக ராஜா ரூபாய் பத்தாயிரம் இளையராஜாவிற்கு கொடுத்தார் என்றால் சரிதான். நானும் ராஜாவும் சேர்ந்து எங்கள் ஊரில் உள்ள விஜயகுமாருக்கு மண்ணை செங்கல் சூலைக்காக விற்றோம் என்றால் சரிதான். எங்கள் ஊரில் நாட்டாமை இது தொடர்பாக பஞ்சாயத்து செய்தார்கள் என்றால் நான் அதற்கு செல்லவில்லை. நானும் எனது மூத்த மகன் ராஜாவும் சேர்ந்து கொண்டு எதிரி இளையராஜாவிற்கு சொத்து பாகப்பிரிவினை செய்து கொடுக்காமல் தொடர்ச்சியாக அவரிடம் பிரச்சனை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. இளையராஜாவிற்காக ஒரு சொத்தை வித்து அவருக்கு திருமணம் செய்து வைத்துள்ளேன் அதுதான் அவருடைய பாகம். எனது பெரிய மகன் ராஜாவிற்கு நான் செலவு செய்து திருமணம் செய்து வைக்கவில்லை அவரே திருமணம் செய்து கொண்டார். தந்தை என்ற அடிப்படையில் ராஜாவிற்கு நான் ஒன்றுமே செய்யவில்லை. முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகள் எந்தவித சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றாலும் எதிரிகள் என்னையோ ராஜாவையோ தாக்கவில்லை என்றாலும் இளையராஜாவிற்கு சொத்து கொடுக்கக் கூடாது என்பதற்காக அவர் மீது பொய்யாக புகார் அளித்து அதனடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொண்டு ஏற்கப்பட்டது.

M. D[illegible] 27/5/25

நீதித்துறை நடுவர் எண்-II
மயிலாடுதுறை

L T I Mark of Anbazhagan